ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 11,773 — 1959 ජූනි 13 වැනි සෙනසුරාදා — 13.6.1959

11,773 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 13 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி II—சட்ட சம்பந்தமானது

சுப்பிறீங்கோட் கிறிமினல் வழக்கு விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

பிரகடனம்

இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் கிழக்கு மாகாணத்துக்கென நடாத்தும் கிறிமினல் வழக்கு விசாரணை மட்டக்களப்பில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1959 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ந் திகதி காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.

பிஸ்கால் கந்தோர்,
மட்டக்களப்பு, 11.6.59.

ஜே. வி. பொன்சேகா,
இ. மா. பிஸ்கால்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது